**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS. 80/2022

பெயர் : மணி (DW1) (Cross )

த/க/பெ. :

தேதி : 19.11.2025

ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1 ஆம் பிரதிவாதி என் தாயார் ஆவார். 2 ஆம் பிரதிவாதி என் அண்ணன். இந்த வழக்கில் நான் 3 ஆம் பிரதிவாதி. வாதி என்ன வழக்கு போட்டுள்ளார் என்று எனக்கு தெரியாது. வழக்கு சர்வே எண்.79/3 அதை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக வழக்கு போட்டுள்ளார். வழக்குரை நான்கு எல்லை எனக்கு தெரியும். தாவா சொத்து சீர்காழி நகராட்சி எல்லைக்குள் உள்ளது என்றால் சரிதான். எந்த வருடம் நாங்கள் ஆக்கிரமிப்பு செய்ததாக பிராதில் குறிப்பிட்டுள்ளார் என்பது தெரியவில்லை. அதில் கல் சுவர் கட்டப்பட்டு சிமெண்டு பூசப்பட்டுள்ளது என்றால் சரிதான், மேலே கீற்று கூறை போடப்பட்டுள்ளது. மேல் கூறையை அகற்றிவிட்டு காங்கிரேட் தளம் போட்டுள்ளதாக எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனவே தற்போது கூறை இல்லை என்றால் சரிதான். கல் கட்டடம் கட்டி மேலே காங்கிரேட் தளம் போட்டால் நகராட்சியில் அனுமதி வாங்க வேண்டும் என்றால் அந்த விபரம் தெரியாது. வழக்கில் வாதி என்ன ஆவணங்கள் போட்டுள்ளார் என்று தெரியாது. எனவே வாதியின் ஆவணங்கள் குறித்து நான் கட்சி எதுவும் எடுக்கவில்லை என்றால் எனக்கு இந்த கேள்வி புரியவில்லை. நான் வாதியை பார்த்தது இல்லை. வாதியை இந்த நீதிமன்றத்தில் விசாரித்தார்கள் என்றால் அது குறித்து தெரியாது. வாதியை என் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்தார் என்றால் அது குறித்து எனது வழக்கறிஞரை தான் கேட்க வேண்டும். வழக்கில் இ.பி பில், ரேசன் கார்டு, வாக்காளர் அடையாள அட்டை, ராஜசேகர், எழில், இளமுருகன் ஆகியோர் எழுதிக் கொடுத்த பத்திரம் ஆகியவற்றை வழக்கில் போட்டுள்ளேன். நான் சொல்வது போல் ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதியின் அப்பா ராஜசேகர் என் அப்பா குஞ்சிக்கு பத்திரம் எழுதிக் கொடுத்தார். அந்த பத்திரத்தில் இளமுருகன், எழில்வேலன், ராஜசேகர் ஆகியோர் கையெழுத்து போட்டுக் கொடுத்துள்ளார்கள். அவ்வாறு பத்திரம் எழுதிக் கொடுத்த விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். எனக்கு

54 வயதாகிறது. எவ்வளவு ரூபாய்க்கு பத்திரம் வாங்கினார்கள் என்றால் எனக்கு நினைவு இல்லை, எனது அப்பாவிற்கு தான் தெரியும். அப்போது நான் சின்னபிள்ளையாக இருந்தேன். இவ்வழக்கில் நான் என்ன உரிமை கொண்டாடுகிறேன் என்றால் ராஜசேகர் என் அப்பாவிற்கு எழுதிக் கொடுத்ததால் அந்த வீட்டில் நாங்கள் இருக்கிறோம் அது எங்கள் சொத்து. என் அப்பாவிற்கு ராஜசேகர் எழுதிக் கொடுத்த பத்திரத்தை பதிவு செய்யவில்லை. வாதி 20 குழிக்கு வழக்கு போட்டுள்ளார். எத்தனை குழிக்கு வழக்கு போட்டுள்ளார் என்று பிராதை படித்து தெரிந்து கொண்டேனா என்றால் 20 குழி. வாதியின் தந்தை ராஜசேகர் என் தந்தைக்கு ஆவணம் எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை என்றாலும், அவர் வாதிக்கு செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளதால் அது வாதியின் சொத்து என்றாலும் சரியல்ல. எதிர்வழக்குரைக்கு விபரம் வழக்கறிஞரிடம் நான் தான் கூறினேன். வழக்கு சொத்தில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும், 2017 ல் அதை ஆக்கிரமித்து அதில் கட்டிடம் கட்டியுள்ளோம் என்றால் சரியல்ல. வாதி முதலில் மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு போட்டுள்ளார் என்றால் அது பற்றி தெரியவில்லை. நான் சொன்ன விபரம் உண்மை இல்லை என்றாலும், கட்டடத்தை வாதிக்கு காலி சுவாதீனம் கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல.